கல்குடா கல்வி வலய வனநிலைய பரீட்சை சபை

பயிற்சிப் பரீட்சை க.பொ.த (உ/த) – 2018 ஆனி

தரம்: 12 (2019)	தவணை: 03	கணக்கீடு	நேரம்: 3மணி
சுட்டெண்/பெயர்:-			புள்ளிகள்:

பகுதி I

- 1 இலிருந்து 30 வரையான வினாக்களுக்கான சரியான விடையின் இலக்கத்தை அடைப்பு குறிக்குள் எழுதுக.

1. அக்கறையுடைய தரப்பினருக்கு வழங்கப்படும் தகவல்கள் பொருளாதார தகவல்கள் ஆகும். பொருளாதார தகவல்களுக்கு சரியான நடவடிக்கை எது?
   1. வணிகத்தின் நிதியாண்டு இலாபம் ரூபா 100,000
   2. நிறுவன ஊழியர்களின் எண்ணிக்கை 500 பேர்களாவர்
   3. வணிகத்தின் முகாமையாளர் 50 பேர்களாகும்
   4. இயற்கை அனத்தத்தினால் 1000 பேர்கள் அழிந்தனர்
   5. ஊழியர்கள் வேலை செய்ய சிறந்த சூழல் காணப்படல் வேண்டும் ( )

2. நிதி கணக்கீட்டின் செயல்முறையாக உள்ளக்கப்படும் விடயமாக கருதப்படுவது?
   1. திட்டமிடல்
   2. பகுப்பாய்வு செய்தல்
   3. கட்டுப்படுத்தல்
   4. வரவு செலவு திட்டம் தயாரித்தல்
   5. எல்லை கிரய தீர்மானம் ( )

3. வரிகொள்கை, விலைமட்டம், அரச கொள்கை போன்ற மாறிகளை உள்ளடக்கிய சூழல் எது?
   1. தொழில் சார் சூழல்
   2. சட்ட சூழல்
   3. பொருளாதார அரசியல் சூழல்
   4. தொழிநுட்ப சூழல்
   5. சமூக கலாச்சார சூழல் ( )

4. நிறுவனத்தின் கணக்கீட்டு செயன்முறைகளின் தொடர்பில் உள்ளடக்கப்படும் சரியான கூற்று?
   1. எல்லா மூல ஆவணங்களும் நிறுவனத்தின் கணக்காளரால் தயாரிக்கப்படுகின்றது
   2. நாளேடுகளில் பதியப்பட்ட நடவடிக்கை அவ்அவ்ப் பேரேட்டுக்கு மாற்றப்படும்
   3. கடனடிப்படையில் கொள்வனவு செய்யப்படும் எல்லா சொத்துக்களும் கொள்வனவு நாளேட்டில் பதியப்படும்
   4. நிறுவனமொன்றின் பரீட்சை மீதி கணக்குமானது கணக்கீட்டு செயன்முறை ஆகும்.
   5. நிறுவனமொன்றில் 1000 ஊழியர்கள் வேலை செய்வதாக குறித்து காட்டுதல் ( )

5. இறுதி இருப்பின் பெறுமதி கிரயம் நிகரத்தக்க தேறிய பெறுமதியில் எது குறைவோ அதனையே நிதி நிலமைக் கூற்றில் காட்டப்பட வேண்டும் என கூறும் எண்ணக்கரு?
   1. இணைதல் எண்ணக்கரு
   2. கால அளவு எண்ணக்கரு
   3. தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு
   4. தேறல் எண்ணக்கரு
   5. அட்டறு எண்ணக்கரு ( )

6. நடைமுறை அல்லா சொத்துக்களை வாங்கும் போது செலுத்திய விலையின் படி கணக்குகளில் பதிவு செய்தல் வேண்டும் எனக்கூறும் எண்ணக்கரு?
   1. கொள்கை மாறாமை
   2. வெளிப்படுத்தல் எண்ணக்கரு
   3. பொருண்மை எண்ணக்கரு
   4. வரலாற்று கிரய எண்ணக்கரு
   5. தேறல் எண்ணக்கரு ( )

www.lkedu.lk

7. வணிகமொன்றின் உரிமையில் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற கொடுக்கல் வாங்கல் உள்ளடக்கிய விடையினை தெரிவு செய்க

   A. உரிமையாளரிடம் காணப்பட்ட ரூபா 400,000 பெறுமதியான காணிக்கட்டடம் வணிகச்செயற்பாட்டில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது
   B. உரிமையாளரின் வீட்டு தொலைபேசி கட்டணம் ரூபா 50000 வணிகத்தின் பணத்திலிருந்து செலுத்துதல்
   C. வணிகத்தின் மின்சார கட்டணம் ரூபா 100000 செலுத்தப்பட்டது
   D. வணிகத்தின் பயன்பாட்டிற்கு ரூபா 150000 செலுத்தி கணினி கொள்வனவு செய்யப்பட்டது
   E. வணிகத்தின் நிலையான வைப்பிற்கு வட்டி ரூபா 10000 கிடைத்தல்

   1. A,B,D,E
   2. A,B,C,D
   3. A,B,C,E
   4. B,C,D,E
   5. A,B,C மட்டும ( )

8. றேகன் என்பவர் தனது வியாபாரத்துக்கு பெறப்பட்ட கடனில் மாதாந்த தவணைக் கொடுப்பனவு ரூபா 200000 ஐ தனது சொந்தப் பணத்திலுருந்து செலுத்தினார். இக் கொடுப்பனவுக்குள் உள்ளடக்கிய வட்டி ரூபா 75000 ஆகும். இக் கணக்கீட்டு சமன்பாட்டில் இக் கொடுக்கல் வாங்கலின் தேறிய விளைவு காட்டுவது.

   சொத்துக்கள் = பொறுப்புக்கள் + உரிமையாண்மை

   1. (200000) = (200000) + 0
   2. (200000) = (125000) + (75000)
   3. +125000 = 0 + 125000
   4. 0 = (200000) + 100000
   5. 0 = (125000) + 125000 ( )

9. கடன்பட்டோரான சதாவிடம் ரு. 200,000 காசோலை ஒன்று பெறப்பட்டது. இது 10% கழிவு அனுமதித்த பின்னர் வைப்பில் இடப்பட்டது. அன்றே இக்காசோலை மறுக்கப்பட்டதுடன் கழிவும் இரத்து செய்யப்பட்டது. எனக்கொண்டு சரியான பதிவினை காட்டுக.

   1. காசுக் கணக்கு வரவு ரு 180,000
      கொடுத்த கழிவு வரவு ரு 20,000
      கடன்பட்டோர் கட்டுபாட்டுக்கணக்கு செலவு ரு 200,000

   2. காசுக்கணக்கு வரவு ரு 200,000
      அனுமதித்த கழிவு கணக்கு செலவு ரூபா 20,000
      கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கு செலவு ரூபா 180,000

   3. கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கு (வரவு)ரூபா 200,000
      கொடுத்த கழிவு கணக்கு (செலவு)ரூபா 20,000
      காசு கணக்கு (செலவு)ரூபா 180,000

   4. கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கு (வரவு) ரூபா 180,000
      கொடுத்த கழிவு கணக்கு(வரவு) ரூபா 20,000
      காசு கணக்கு (செலவு) ரூபா 200,000

   5. காசு கணக்கு (வரவு) ரூபா 180,000
      பெற்ற கழிவு கணக்கு (வரவு) ரூபா 20,000
      கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கு (செலவு) ரூபா 200,000 ( )

10. அபிராமி சில்லறை வணிகத்தின் மாதாந்த சில்லறை காசு வசக்கட்டு ரூபா 6000 ஆகும். 2017 ஜனவரி மாத்தில் ஏற்பட்ட சில்லறை செலவுகள் வருமாறு

    அஞ்சல் செலவுகள் - 150
    பிரயாணச் செலவுகள் - 250
    முத்திரை செலவுகள் - 300
    தளபாடக் கொள்வனவு - 4000
    குளிர்பானம் வாங்கியது - 300

    2017.01.31ல் சில்லறை காசேட்டு மீதியாக உள்ள தொகை யாது ?
    1. ரூ 5000 2. ரூ 1000 3. ரூ 2000 4. ரூ 6000 5. ரூ 3000 ( )

www.lkedu.lk

- **தகவலை பயன்படுத்தி 10ஆம் 11ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.**

வியாபாரமானது எல்லாக் கொடுக்கல் வாங்கலும் வங்கியினூடாக மேற்கொள்ளப்படுகிறது.
2016 யூலை மாதத்திற்கான காசுக்கொடுக்கல் வாங்களின் விபரம்

	ரூபா (000)
01.07.2016 - காசு மீதி	200
31.07.2016 - காசுப்பெறுவனவு நாளேட்டின் மொத்த தொகை	1400
31.07.2016 - காசுக்கொடுப்பனவு நாளேட்டின் மொத்த தொகை	1000

02.08.2016 - பெறப்பட்ட யூலை மாதத்தின் வங்கிக்கூற்று சுருக்கம்

	ரூபா(000)
01.07.2016 ல் மீதி	200
வசூலிக்கப்பட்ட காசோலைகள்	1200
செலுத்தப்பட்ட காசோலைகள்	900
நேரடியாக செலவு வைக்கப்பட்ட பங்கிலாபம்	300
தவணை கொடுப்பனவு	150

01.07.2016 வசூலிக்கபடாத / மாற்றப்படாத காசோலைகள் எதுவும் இல்லை

11. 31.07.2017ல் காசுக்கணக்கில் சீராக்கிய மீதி யாது ?
    1. ரூ 100 000 2. ரூ 750 000 3. ரூ 150 000 4. ரூ 500 000 5. ரூ 600 000 ( )

12. இவ் வியாபாரத்தின் 2016 யூலை மாதத்திற்கான காசுக் கொடுக்கல் வாங்களில் சரியான கூற்று எவை ?
    A. 2016 யூலை மாதத்திற்கான காசுப்பெறுவனவு ரூ 1700 000
    B. 2016 யூலை மாதத்திற்கான காசுக்கொடுப்பனவு ரூ 1150 000
    C. 31.07.2016 வசூலிக்கப்படாத காசோலைகள் ரூ 200 000
    D. 31.7.2016 சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் ரூ 100 000

    1. A,C மாத்திரம் 2. B,D மாத்திரம் 3. A,B மாத்திரம் 4. C,D மாத்திரம் 5. ABCD எல்லாம் ( )

13. கடன் விற்பனையானது ரூ 10 000 வாகும். Vat வரி 10% ஆகும் .இதற்கான இரட்டைப்பதிவு (vat வரியுடனானது)
    1. கடன்படடோர் கட்டுப்பாட்டு கணக்கு (வரவு) ரூபா 10000
       vat கணக்கு (செலவு) ரூபா 1000
       விற்பனை கணக்கு (செலவு)ரூபா 9000

    2. கடன்படடோர் கட்டுப்பாட்டு கணக்கு (வரவு) ரூபா 9000
       vat வரி கணக்கு (வரவு) ரூபா 1000
       விற்பனை கணக்கு (செலவு) 10000

    3. விற்பனை கணக்கு (வரவு) ரூபா 11000
       vat வரி கணக்கு (செலவு) ரூபா 1000
       கடன்பட்டோர் கடட்டுப்பாட்டு கணக்கு (செலவு) 10000

    4. விற்பனை கணக்கு (வரவு) ரூபா 9000
       vat வரி கணக்கு (வரவு) 1000
       கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கு (செலவு) ரூபா 10000

    5. கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கு (வரவு) ரூபா 11000
       vat வரி கணக்கு(செலவு) ரூபா 1000
       விற்பனை கணக்கு (செலவு) ரூபா 10000 ( )

- **14,15 வினாக்களுக்கு விடையளிக்க இத் தகவலைப் பயன்படுத்துக.**

14. நாடா வியாபாரத்தில் இருந்து எடுக்கப்பட்ட தகவல்கள் வருமாரு

	31/04/2017	31/04/2016
வியாபார வருமதிகள்	1620 000	1000 000
ஐயக்கூற்றுக்கான பகிர்வு		80 000

www.ikedu.lk

மேலும் 20000 ரூபாவை அறவிட முடியாக் கடனாக பதிவழிக்கப்படுவதுடன் 10% ஐயக்கடன் ஒதுக்கீடு செய்க. இவை ஐயக்கடன் அறவிடமுடியாக்கடன் கணக்கின் ஊடாக சீராக்கம் செய்க.

பின்வருவனவற்றுள் சரியான மீதி யாது

31/04/2017 அறவிடமுடியாக் ஐயக்கடன் கணக்கு (ரூபா 000)	31/04/2017 வியாபார வருமதி மீதிகள்
1. 100	1440
2. 160	1460
3. 80	1600
4. 80	1440
5. 20	1600

( )

15. வருமானக் கூற்றில் 31/04/2017 இல் காட்ட வேண்டிய அறவிட முடியா ஐயக்கடன் தொகை யாது? ரூபா (000)
    1. 100
    2. 80
    3. 160
    4. 60
    5. 140 ( )

- **16,17,18 ம் வினாக்களுக்கு விடையளிக்க கீழே தரப்பட்ட தகவல்களை பயன்படுத்துக?**

சூரியா என்பவர் ரூ 200 000 பட்டியல் விலை கொண்ட பொருட்களை 10% வியாபார கழிவு அனுமதித்த பின்னர் சிம்பு என்பவருக்கு 15.04.2017ல் கடனுக்கு விற்பனை செய்யப்பட்டது. இதன் கிரயப் பெறுமதி ரூ 80 000 ஆகும். ரூ 40 000 விற்பனைப் பெறுமதி உடைய பொருட்கள் (கிரயம் ரூ 30 000) ஆனவை 20.01.2017 சிம்புவால் திருப்பி அனுப்பப்பட்டது சிம்பு செலுத்த வேண்டி மிதியை 5% காசுக் கழிவை பெற்ற பின்னர் கொடுத்து தீர்த்துள்ளார்.

16. சிம்பு வியாபாரத்தின் இக் கொடுக்கல் வாங்கலை பதிவதற்கு பயன்படுத்திய மூல ஏடுகளின் ஒழுங்கு வரிசை.
    1. விற்பனை ஏடு, உட்திரும்பல் ஏடு, காசுக் கொடுப்பனவு ஏடு
    2. விற்பனை ஏடு, உட்திரும்பல் ஏடு, காசுக் பெறுவனவு ஏடு
    3. கொள்வனவு ஏடு, வெளித்திரும்பல் ஏடு, காசுக் பெறுவனவு ஏடு
    4. கொள்வனவு ஏடு, உட்திரும்பல் ஏடு, காசுக் கொடுப்பனவு ஏடு
    5. கொள்வனவு நாளேடு, வெளித்திரும்பல் ஏடு, காசுக் கொடுப்பனவு ஏடு ( )

17. மேற்படி கொடுக்கல் வாங்கல் காரணமாக சூரியா வியாபாரத்தில் 31.04.2017 முடிவடைந்த வருடத்தில் தேறிய இலாபத்தில் தேறிய அதிகரிப்பு
    1. ரூபா 14000
    2. ரூபா 1000
    3. ரூபா 6000
    4. ரூபா 24000
    5. ரூபா 26000 ( )

18. சிம்புவினால் 31/04/2017இல் கொடுத்து தீர்க்கப்பட வேண்டிய பணமும். கழிவுத் தொகையும் யாது?

கழிவுத் தொகை ரூபா	தீர்க்கப்பட வேண்டிய பணம் ரூபா
1. ரூபா 4000	86000
2. ரூபா 4500	85500
3. ரூபா 6000	114000
4. ரூபா 10000	190000
5. ரூபா 5000	85000 ( )

19. 2017/3/31 இல் முடிவடையும் வருடத்தினுள் செலுத்திய மின்சார பட்டியல் பெறுமதி ரூபா 16200 ஆகும். எனினும் வருடத்திற்கு கிடைக்கப் பெற்ற மின்சாரபட்டியலின் பெறுமதி ரூபா 24000 ஆகும். அட்டுறு மின்சார பட்டியலின் தொகையையும், வருமான கூற்றில் காட்ட வேண்டிய தொகையும் யாது?

www.kedu.lk

31/03/2017 அட்டுரு மின்சாரம் ரூபா	வருமான கூற்றில் இடம்பெறும் தொகை ரூபா	
1. ரூபா 16200	ரூபா 24000	
2. ரூபா 16200	ரூபா 40200	
3. ரூபா 7800	ரூபா 24000	
4. ரூபா 7800	ரூபா 16200	
5. ரூபா 16200	ரூபா 7800	( )

- **20, 21, 22ம் வினாக்களுக்கான விடைகளுக்கு கீழே தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்துக.**

20)

வகை	அலகு(ரூ)	கிரயம்(ரூ)	விற்பனை வரவு(ரூ)	விற்பனை செலவு(ரூ)
A	100	10	15	3
B	200	12	10	4
C	400	8	9	5

இருப்பின் நிகரத்தக்க தேறிய பெறுமதியின் இறுதி இருப்பாக காட்டப்படவேண்டிய தொகை யாது?

1. ரூ.3,600 2. ரூ.7,600 3. ரூ.4,000 4. ரூ.3,800 5. ரூ.3,400 ( )

21) வருமானக் கூற்றில் இருப்பு வீழ்ச்சி நட்டமாகக் காட்டப்பட வேண்டிய தொகை யாது?

1. ரூ.3,600 2. ரூ.4,000 3. ரூ.3,200 4. ரூ.3,800 5. ரூ.2,200 ( )

22) வியாபாரக்கணக்கில் இறுதி இருப்பாக காட்டப்படவேண்டிய தொகை யாது?

1. ரூ.7,800 2. ரூ.4,000 3. ரூ.3,800.00 4. ரூ.7,200 5. ரூ.6,200 ( )

- கம்பனியினது நடைமுறை அல்லா சொத்து கொள்வனவு தொடர்பாக இடம்பெற்ற நடவடிக்கைகள் பின்வருமாறு

01/04/2017 இல் பொறிக் கொள்வனவு ரூ. 500,000

பதிவுக்கட்டணம் ரூ. 10,000

அனுமதிக் கட்டணம் ரூ. 50,000

பொறியின் பகுதியை மாற்றும் செலவு ரூ. 20,000

பொறி பராமரிப்புச் செலவு ரூ 20,000

மேலும் பழைய பொறியியந்திரப் பகுதிகள் ரூ. 40,000 ற்கு விற்கப்பட்டது.

23). 31/3/2017ல் ஆதனம் பொறி உபகரணத்தின் கிரயம் யாது?

1. ரூ. 600,000 2 ரூ. 580,000 3. ரூ. 540,000 4. 640,000 5.ரூ.620,000 ( )

24). பின்வரும் தகவல்கள் உற்பத்தி நிறுவனமொன்றின் 2017 மார்ச் மாதத்துடன் தொடர்புடையது

நடைமுறை வேலைக்குறைவு (முதன்மைக் கிரயத்தில் பெறுமதி இடப்பட்டுள்ளது)	ரூ. (000) 100
முடிவுப் பொருள் இருப்பு அதிகரிப்பு	200
பயன்படுத்திய மூலப் பொருள்	400
நேர் ஊழியம்	200
தொழிற்சாலை மேந்தலை	300

இவ் உற்பத்தி நிறுவனத்தின் மார்ச் 2017 மாதத்திற்கான மூலக்கிரயமும், விற்ற சரக்கின் கிரயமும் பின்வருவனவற்றுள் எது?

	மூலக்கிரய மூலம் (ரூ)	விற்பனைக் கிரயம் (ரூ)
1.	500,000	600,000
2.	300,000	400,000
3.	600,000	500,000
4.	700,000	800,000
5.	800,000	600,000

( )

www.ikedu.lk

25) இதிலிருந்து மொத்த உற்பத்திக் கிரயம் யாது?

1. ரூ. 1,000,000 2. ரூ. 400,000 3. ரூ. 500,000
4. ரூ. 1,100,000 5. ரூ. 600,000

( )

26) கம்பனி ஒன்றின் 31/3/2017 இருந்த முழுச் சரக்குகளும் மின்சார ஒழுக்கு காரணமாக அழிவடைந்துள்ளது. 31/3/2017 முடிவடைந்த வருடத்திற்கான தகவல்கள் தரப்பட்டுள்ளன.

ரூ. '000'

01/4/2017	சரக்கிருப்பு	3,500
	கொள்வனவு	5,200
	கொள்வனவு திரும்பல்	200
	விற்பனை	9,600
	விற்பனை செலவு	600

சரக்குகளை அவற்றின் கரயத்தின்மீது 20% இலாபம் வைத்து விற்பனை செய்யப்படுகிறது. 31/3/2017ல் அழிவடைந்த சரக்கின் பெறுமதி யாது?

1. ரூ.1,600 2. ரூ.600,000 3. ரூ.500,000 4. ரூ. 1,000 5. ரூ.700,000

( )

- ஸ்டார் கழகத்தில் இடம்பெற்ற தகவல்கள் வருமாறு

31/3/2016 –	பெறவேண்டிய அங்கத்துவ கட்டணம்	ரூ. 6,000
	முற்பணமாகப் பெற்ற அங்கத்துவ கட்டணம்	ரூ. 1,000
31/3/2017 –	நிலுவை அங்கத்தவ கட்டணம்	ரூ. 4,000
	முற்பணமாகப் பெற்ற கட்டணம்	ரூ. 1,000
வருடத்தில் பெற்ற அங்கத்துவ கட்டணம்		ரூ. 6,000

27) காசு அடிப்படையில் வருமானச் செலவுக் கணக்கில் காட்டப்படும் அங்கத்துவச் சந்தா எவ்வளவு?

1. ரூ.58,000 2. ரூ.60,000 3. ரூ.62,000 4. ரூ.55,000 5. ரூ.68,000 ( )

➢ கமல், விமல், நிமல் ஆகியோர் பங்குடமை வியாபாரத்தின் பங்காளர்களாவர். இலபப்பகிர்வு தொடர்பான உடன்படிக்கை வருமாறு

- கணக்காண்டின்ஈரம்பத்திலுள்ள மூலதனக் கணக்கு மீதியில் ஆண்டுக்கு 20% வட்டி பங்காளர்களுக்கு அனுமதிக்கப்படும்.
- பங்குடமையின் கமல் முழநேர ஊழியர்களாகவும் விமல் பகுதி நேர ஊழியராகவும் செயற்படுகின்றனர். நிமல் வியாபாரக் கருமங்களில் பங்குகொள்வதில்லை. இதனடிப்படையில் கமல் வருடாந்தம் ரூ. 120,000 விமல் ரூ. 80, 000 யும் சம்பளமாகப் பெறுகின்றனர்.
- மூலதன வட்டி, சம்பளம் கழித்த பின்னரான எஞ்சிய இலாபத்தில் 2:2:1 எனப் பகிரப்படும்.

1/1/2017 பங்காளர் மூலதனக் கணக்கு மீதிகள்	கமல்	-	160,000
	நிமல்	-	120,000
	விமல்	-	110,000

- பங்குடமை வியாபாரத்தில் உழைத்த இலாபம் ரூ.400,000 ஆகும்.

28) பங்காளர்கள் தனித்தனியாக உழைத்த இலாபத் தொகை யாது?

	கமல்	நமல்	விமல்
1.	ரூ. 200,000	72,000	126,000
2.	ரூ. 200,800	72,800	126,400
3.	ரூ. 200,600	75,000	125,000
4.	ரூ. 220,000	78,000	127,000
5.	ரூ. 195,000	72,000	126,000

( )

29) வாசன், நேசன், பங்குடமையின் நடைமுறைக் கணக்கு மீதியும், மூலதனக் கணக்கு மீதியும் தரப்பட்டுள்ளது.

1/3/2017 மூலதன க/கு மீதி	வாசன்	- ரூ. 300,000
	நேசன்	- ரூ. 400,000
31/3/2017 நடைமுறைக் க/கு மீதி	வாசன்	- ரூ. 128,600
	நேசன்	- ரூ. 140,100

www.lkedu.lk

ஒவ்வொருவரின் மொத்த உரிமையண்மை யாது?

	வாசன் (ரூ.)	நேசன்(ரூ)
1.	271,400	259,900
2.	300,000	400,000
3.	428,600	540,100
4.	426,100	525,600
5.	328,200	520,100

( )

30) வரையறுத்த சுரேனா கம்பனியின் 31/3/2017ல் உள்ள பரீட்சை மீதி சமப்படவில்லை. இவ்வேறுபாடு தொங்கல் கணக்கிற்கு மாற்றப்பட்டது. தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட பரிசீலனையின் போது பின்வருவன வெளிக் கொணரப்பட்டது.

- காசுக்கு கொள்வனவு ரூ. 120,000 கொள்வனவு க/கில் மட்டும் பதியப்பட்டுள்ளது.
- விற்பனை நாளேடானது ரூ. 50,000 கூட்டிப் பதியப்பட்டுள்ளது.
- மீளப் பெற்ற அறவிடமுடியாக் கடன் ரூ. 20,000 செலவாகப் பதியப்பட்டுள்ளது.
- சம்பளமாகக் கொடுத்தது ரூ. 10,000 காசுக் கணக்கில் செலவில் இருதடவை பதியப்பட்டுள்ளது.

மேற்கூறிய பிழைகளைத் திருத்துவதற்கு முன்னரான தொங்கல் கணக்கு மீதி

1. ரூ. 200,000 வரவு
2. ரூ. 130,000 செலவு
3. ரூ. 180,000 வரவு
4. ரூ. 150,000 வரவு
5. ரூ. 150,000 செலவு

( )

(30x2 = 60 புள்ளி)

➢ **31 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்கு சுருக்கமான விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

31) கணக்கீட்டுச் செயன்முறையின் படிமுறைகள் 2 தருக

1. ----------

2. ----------

32) நிறுவனமொன்றின் கொடுக்கல் வாங்கல் இரண்டும; கணக்கீட்டு சமன்பாட்டில் தரப்பட்டுள்ளது.

கொடுக்கல் வாங்கல்	வருமானம்	- செலவு	+ பொறுப்பு	= சொத்து
1	+ 15,000	-	+ 3,000	= + 18,000
2	-	+ 36,000	-	= + 7,000 - 43,000

மேற்படி ஒவ்வொன்றினதும் தாக்கத்துக்கான பொருத்தமான கொடுக்கல் வாங்கலைத் தருக.

1. ----------

2. ----------

33) சுரேனா நிதிவருடம் 31/12/2017ல் முடிவடைகின்றது. இந்நிறுவனம் 30/06/2017ல் புதிய பொறி ஒன்றை ரூ. 840,000 இற்கு கொள்வனவு செய்தது. இப்பொறி தொடர்பாக எழுந்த ஏனைய கிரயம் வருமாறு.

இறக்குமதித் தீர்வை ரூ. 100,000
பொருத்துதல் செலவு ரூ. 120,000
பராமரிப்புச் செலவு ரூ. 20,000

இப்பொறியின் ஆயுட்காலம் 10 வருடங்களும் எஞ்சிய பெறுமதி ரூ. 60,000 காணப்பட்டது.
31/12/2017ல்

1. பொறியின் கிரயம் ----------

2. பொறியின் பெறுமான தேய்வுத் தொகை ----------

34) கிரய முகாமை கணக்கீடு, நிதிக் கணக்கீடு தொடர்பாக பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.

	கிரய முகாமைக் கணக்கீடு	நிதிக் கணக்கீடு
1. அறிக்கையிடும் காலம்		
2. சட்ட தேவைப்பாடு		
3. தகவல்களை பயன்படுத்திடும் பிரிவினர்		

www.ikedu.lk

35) சிவா விளையாட்டுக் கழகத்தின் சந்தா தொடர்பான விபரம் வருமாறு

	(ரூபா)	(ரூபா)
	2016/01/01	2016/12/31
பெறவேண்டிய சந்தா	95,000	90,000
முற்பண சந்தா	30,000	50,000

2016ம் ஆண்டில் பெறப்பட்ட சந்தாப் பணம் ரூ. 1460,000

1. வருமானச் செலவு கணக்கு காட்டப்படும் சந்தா----------

36) ராமன், கமலன் இருவரும் இலபநட்டங்களை 2:1 எனும் விகிதத்தில் பகிரும் பங்குடமையில் ஈடுபடுகின்றனர். இதில் தேவன் புதிதாக இணைந்து கொண்டார். 2:1:1 புதிய இலாபநட்ட விகிதமாகும். தேவன் சேர்ந்த தினத்தில் பங்குடமையில் நன்மதிப்பு ரூ. 300,000 மதிப்பிடப்பட்டது. இதனை நன்மதிப்புக் கணக்கில் காட்டக்கூடாது. பதிவழிக்கப்படல் வேண்டும். பதிவழிக்கும் இரட்டைப்பதிவு யாது?

➢ **37,38ம் வினாக்களுக்கு விடையளிக்க கீழேயுள்ள தகவல்களைப் பயன்படுத்துக.**

31/3/2017ல் பரீட்சை மீதி பின்வருமாறு ரூபா.

சம்பளம் கூலி (தேறியது)	72,000
விற்பனை	920,000
கொள்வனவு	345,000

மேலதிக தகவல்கள்

1. ஊழியர் சேமலாப நிதிக்கு(EPF) ஊழியர் பங்களிப்பு 10%. தொழில் வழங்குனர் பங்களிப்பு 15%, ஊழியர் நம்பிக்கை நிதிப் பங்களிப்பு (ETF) 3% கழிக்கப்பட்டது.
2. கொள்வனவு, விற்பனைகளில் 15% Vat வரி உள்ளடங்கியுள்ளது.

37) வருமான கூற்றுக்கு கொண்டு செல்லும்
EPF, ETF தொகைகளை :

1. EPF ----------
2. ETF ----------

38) நிதி நிலைமைக் கூற்றில் EPF, ETF தொடர்பாக கொண்டு செல்லும் தொகை ----------

39) Vat வரியாக நிதி நிலமைக் கூற்றில் பொறுப்பாகக் காட்ட வேண்டிய தொகை ----------

40) குமார் நிறுவனத்தின் மார்ச் 31 கணக்காண்டாகும் சொத்து, பொறுப்பு பற்றிய தகவல்கள் வருமாறு.

	2017.03.31	2017.04.01
	ரூ.	ரூ.
சொத்துக்கள்	1,300,000	1,100,000
பொறுப்புக்கள்	800,000	900,000

2016/2017ல் வீட்டுத் தேவைக்காக ரூ. 120,000 காசாகப் பதியப்பட்டதுடன், மேலதிக மூலதனமாக ரூ. 60,000 வியாபாரத்தில் ஈடுபடுத்தினர். இலாபம் யாது?

இலாபம் ----------

(20 x 2 = 40 புள்ளி)

30 x 2 = 60
20 x 2 = 40

www.ikeu.lk

முதலாம் வினா உட்பட ஏனைய நான்கு வினாக்களுக்கும் சேர்த்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

குறிப்பு: முதலாம் வினா கட்டாயமானது.

---

①

சூர்யாவும் பிரபும் இலாபநட்டங்களை 2:1 எனும் விதத்தில் பகிரும் பங்களார்களாவர். 2016 ஏப்பரல்1 கார்த்திக் இலாபநட்டத்தில் ¼ பங்கு பெறும் வகையில் பங்காளராக அனுமதிக்கப்பட்டார். புதிய பங்குடமை ஒப்பந்தப்படி வருடாந்த சம்பளம் ரூ. 12,000 பெற உரித்துடையவர்கள். கார்த்திக் பங்கு மூலதனமாகவும் நன்மதிப்பாகவும் காசாகவும் கொண்டு வந்த ரூ. 330,000 மாத்திரம் புத்தகத்தில் பதியப்பட்டுள்ளது.

2017/3/31ல் பரீட்சை மீதி	வரவு ரூ. '000'	செலவு ரூ. '000'
கட்டடம் (கிரயம்)	487	
பொறி	240	
மோட்டார் வாகனம் (கிரயம்)	136	
2016/04/01 பெறுமானத் தேய்வு ஏற்பாடு		
கட்டடம்		37
பொறி		30
மோட்டார் வாகனம்		46
விற்பனை		900
2016/04/01 இருப்பு		
மூலப் பொருள்	140	
நடைமுறை வேலை	60	
முடிவுப் பொருள்	290	
கட்டணம் தொழிற்சாலை	12	
அலுவலகம்	7	
நேர்க்கூலி	136	
மினசாரம் தொழிற்சாலை	12	
அலுவலகம்	6	
மூலப் பொருள் கொள்வனவு	400	
வெளித்திரும்பல்		7
அனுமதிக்கப்பட்ட கழிவு	4	
நன்மதிப்பு	60	
கடன்பட்டோர்	400	
கடன்கொடுத்தோர்		260
கார்த்திக் கொண்டுவந்த காசு		330
மூலதன் கணக்கு சூரியா		500
பிரபு		300
நடைமுறைக் கணக்கு சூரியா (செலவு)		150
பிரபு (வரவு)	70	
தொழிற்சாலை பராமரிப்பு	28	
வங்கி மீதி		50
உட்காவுகைக் கூலி	22	
வெளிக்காவுகைக் கூலி	40	
தொழிற்சாலை மேற்பார்வையாளர் சம்பளம்	60	
	2,610	2,610

மேலதிக தகவல்கள்

கார்த்திக் பங்காளராக அனுமதிக்கும் போது பங்காளர் பின்வரும் விடயங்களில் உடன்பட்டார்.

i. ஏற்கனவே நன்மதிப்பு கணக்கிலுள்ள தொகையினை சூரியா, பிரபு மற்றும் கார்த்திக் பங்காளர்கள் பதிவழிப்பு செய்துவிட முடிவு செய்தனர்.

ii. நடைமுறை அல்லா சொத்துக்களுக்கு அதன் கிரயத்தில் பெறுமானத் தேய்விடல் வேண்டும்
கட்டடம் - வருடாந்தம் 5%
பொறி - ” 10%

www.ikedu.lk

மோட்டார் - ” 20%

iii. 31/3/31ல் இருப்புக்கள் வருமாறு

மூலப் பொருள்	ரூ. 180,000
நடைமுறை வேலை	ரூ. 50,000
முடிவுப் பொருள்	ரூ. 325,000

- நடைமுறை வேலை பொருட்கள் தொழிற்சாலைக் கிரயத்தில் மதிப்பிடப்படும்.
- இறுதி முடிவுப் பொருள் இருப்பில் உள்ளடக்கியிருக்கும் ரூ. 25,000 கிரயமான பொருட்கள் சேதமடைந்தன. இவற்றை ரூ. 15,000 தேறக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவற்றை அகற்றுவதற்கு ரூ. 5,000 செலவுகள் ஏற்படும்.

iv. வருட இறுதியில் பங்காளருக்கு செலுத்திய சம்பளம் ரூ. 30,000 நேர்க்கூலிக் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

v. மோட்டார், கட்டடம் கிரயத்தில் 50% தொழிற்சாலைக்கு உரியது.

வேண்டப்படுவது

1) நன்மதிப் பதிவழிப்பதற்கான நாட்குறிப்பு
2) பங்காளர் மூலதனக் கணக்கு
3) உற்பத்தி வியாபார இலபநட்ட கணக்கு (வருமானக் கூற்று)
4) பங்காளர் நடைமுறைக்கணக்கு
5) 2011/4/30ல் உள்ளவாறான நிதிநிலமைக் கூற்று

(40 புள்ளி)

② தாசன் மொத்த வியாபாரத்தின் சொத்து, பொறுப்பு செலவுகள் தொடர்பான தகவல்கள் வருமாறு.

	2016/4/31	2017/04/31
	ரூ.	ரூ.
மோட்டார் வாகனம் (தேறியது)	500,000	450,000
இருப்பு	50,000	75,000
கடன்பட்டோர்	60,000	65,000
அட்டுறு செயற்பாட்டுச் செலவு	10,000	12,000
காசு/பங்கு	75,000	?

2016/2017 இடம்பெற்ற காசுக்கொடுக்கல் வாங்கல் வருமாறு

காசு விற்பனை	ரூ. 400,000
கடன்பட்டோரிடம் பெற்றது	ரூ. 500,000
காசுக் கொள்வனவு	ரூ. 470,000
செயற்பாட்டு செலவுக் கொடுப்பனவு	ரூ. 90,000
உரிமையாளர் எடுப்பனவு	ரூ. 110,000

வேண்டப்படுவது

1) காசு மீதியினைக் கணிக்க
2) மொத்த விற்பனையினைக் கணிக்க
3) மோட்டார் வாகனக் கணக்கைத் தயாரித்து பெறுமானத் தேய்வைக் கணிக்க
4) செயற்பாட்டு செலவினைக் கணிக்க
5) வருமானக் கூற்று
6) 2017/3/31ல் உள்ளவாறு நிதிநிலமைக் கூற்று.

(15 புள்ளி)

③

அ) சாலினி நிறுவனத்தின் கணக்காண்டு 31ல் முடிவடைகிறது. 2017/01/01ல் மோட்டார் வாகனக் கணக்கு ரூ. 1,200,000ஆகவும், மோட்டார் ஏற்பாட்டு கணக்கு ரூ. 650,000 ஆகவும் இருந்தது. 2015/07/01 ரூ. 150,000 இற்கு கொள்வனவு செய்த மோட்டார் வாகனம் 2017/06/30 திகதியன்று ரூ. 60,000 இற்கு விற்கப்பட்டது. இவ் அகற்றல் மூலம் பெற்ற காசு காசு விற்பனையாகக் கருதி காசுக் கணக்கிலும், விற்பனைக் கணக்கிலும் பதிவு செய்ததைத் தவிர வேறு எப்பதிவும் இடம்பெறவில்லை. ஆண்டுக்கு 20% நேர்கோட்டு முறையில் தேய்வு இடப்படுகின்றது.
வேண்டப்படுவது

www.kedu.lk

1) பொது நாட்குறிப்பு
2) மோட்டார் வாகன கணக்கு
3) மோட்டார் வாகன தேய்வுக் கணக்கு
4) மோட்டார் வாகன தேய்வுக் ஏற்பாட்டுக் கணக்கு
5) மோட்டார் வாகன அகற்றல் கணக்கு

(7 புள்ளி)

ஆ. முரளி வணிகத்தின் 2017/03/31 முடிவடையும் வருடத்தில் கணக்கு வைக்கும்போது ஏற்பட்ட வழுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

i. கமலனுக்குச் செய்த கடன் விற்பனைக்கான பட்டியல் ரூ. 30,000 ஏடுகளில் விடுபட்டிருந்தது.
ii. கட்டத் திருத்தம் ரூ. 12,000 கட்டடக் கணக்கில் வரவில் பதியப்பட்டுள்ளது.
iii. மின்சாரக் கட்டணம் ரூ. 2,000 இருமுறை ஏடுகளில் பதியப்பட்டுள்ளது.
iv. நசீரிடமிருந்து கடனுக்குக் கொள்வனவு செய்த ரூ. 15,000 கொள்வனவுப் பட்டியல் ஒன்று கொள்வனவு நாட் குறிப்பேட்டில் ரூ. 8,100 என பதியப்பட்டுள்ளது.
v. காசு விற்பனை ரூ. 4,000 காசேட்டில் சரியாகப் பதிவு செய்யப்பட்டு விற்பனைக் கணக்கில் பதிவுசெய்யப்படவில்லை என்பதுடன் ரவி செலுத்திய காசு ரூ. 24,000 காசேட்டில் சரியாகப் பதிவு செய்யப்பட்டதுடன், ரவியின் கணக்கில் ரூ. 20,000 என வரவு வைக்கப்பட்டுள்ளது.

வேண்டப்படுவது

1) வழுக்களையும் திருத்தும் பொது நாட்குறிப்பேட்டு பதிவுகள்.
2) முரளி வணிகத்தின் வருடத்திற்கான தேறிய லாபம் ரூ. 128,000 ஆயின் தேறிய லாபத்தை சீராக்கும் அட்டவணையை தயாரிக்குக.

(8 புள்ளிகள்)
(15 மொத்தப் புள்ளி)

④ அ) டெனிஸ் கழகத்தின் 2017/12/31 முடிவடைந்த ஆண்டிற்கான கொள்ளல் கொடுத்தல் கணக்கு வருமாறு

	ரூபா		ரூபா
01/01/2017 மீதி	32,600	காகிதாதி	1,000
சந்தா 2016	1,400	பந்துக்கொள்வனவு	8,600
2017	102,000	நிலையான வைப்பு	100,000
2018	300	குளிர்பானக் கொள்வனவு	40,000
பந்துகள் விற்பனை	900	தரைப் பராமரிப்பு	20,000
குளிர்பானசாலை	105,000	பயிற்றுவிப்புக் கட்டணம்	5,000
வருமானம்	3,000	சம்பளம் கூலி	15,000
அனுமதிக் கட்டணம்		குளிர்பானசாலை சம்பளம்	16,000
		ஏனைய செலவு	2,100
		31/12/2017 மீதி	37,500
	245,200		245,200

மேலதிக தகவல்கள்

i. அங்கத்தவர் கட்டணம் ஆண்டொன்றிற்கு ரூ. 100. அடுத்த ஆண்டின் மார்ச் 31ம் திகதிக்கு முன் தமது அங்கத்துவ கட்டணத்தை செலுத்த தவறும் பட்சத்தில் அவரின் நிலுவையிலுள்ள தொகை பதிவழிப்ப செய்யப்படும்.
ii. சந்தா விபரம்.

	2016/12/31	2017/12/31
சந்தா நிலுவை	1,600	1,500
முன்னதாக பெறப்பட்ட சந்தா	1,000	300

2017/12/31 ல் நிலுவைச் சந்தா 2017ம்ஆண்டுடன் மட்டுமே தொடர்புடையதாகும்.

iii. 2017/01/01ம் திகதி அலுவலக உபகரணங்களின் பதிவழிப்புப் பெறுமதி ரூ. 12,000 (கிரயம் ரூ. 15,000) ஆகும். தேய்மானம் வருடாந்தம் கிரயத்தில் 10%
iv. குளிர்பானசாலை விற்பனைகளும் கொள்வனவும் கடனுக்கே மேற்கொள்ளப்பட்டது.
v. குளிர்பானசாலை கடன்கொடுத்தோர், கடன்பட்டோர் சொத்துக்கள் வருமாறு

	2016/12/31	2017/12/31
குளிர்பானசாலை கடன்பட்டோர்	6,200	5,250

www.kalvi.lk

குளிர்பானசாலை கடன் கொடுத்தோர்	7,800	3,100
குளிர்பானசாலை தொக்குகள்	21,000	23,000

vi. நிலையான வைப்புக்கு ஆண்டுக்கு 12% வட்டியைப் பெறுவதுடன் வட்டியானது வைப்புடன் கூட்டப்படும்.

வேண்டப்படுவது

1) 2017/12/31 இன் புறச் செயற்பாடுகளின் விளைவினைக் காட்டும் கூற்று
2) 2017/12/31 இல் முடிவடைந்த வருமான செலவுக் கணக்கு
3) 2017/12/31 இல் உள்ளவாறான நிதிநிலமைக் கூற்று

(15 புள்ளி)

⑤ மதன் தனது வியாபாரத்தை ஒற்றைப் பதிவு அடிப்படையில் பேணி வருகிறார்

அ) 2016/2017 ஆண்டுக்கான காசுக் கொடுக்கல் வாங்கல் தகவல் வருமாறு

	(ரூபா)
பற்று	21,000
சம்பளம்	25,000
சில்லறைச் செலவு	29,000
கடன்கொடுத்தோருக்குக் கொடுத்தது	150,000
கடன்பட்டோரிடமிருந்து பெற்றது	250,000
காசுக்கு விற்பனை	50,000

ஆ) சொத்துக்கள் பொறுப்புக்கள் பற்றிய தகவல்கள்

	2015/4/01	2017/3/31
	(ரூபா)	
சரக்கிருப்பு	90,000	102,200
கடன்கொடுத்தோர்	80,000	55,000
கடன்பட்டோர்	220,000	300,000
தளபாடம்	10,000	.....
காணி கட்டிடம்	150,000	.....
காசு	.....	135,000

இ) மேலதிக தகவல்கள்

i. வருட இறுதியில் 2017/3/31ல் கடன்பட்டோரில் ரூ. 15,000 ஐயக்கடன் ஏற்பாடு செய்க.
ii. நடைமுறை அல்லா சொத்துக்களுக்கு 10% தேய்விடுக. (கொள்வனவோ/முடிவுறுத்தல்களோ நிகழவில்லை)
iii. சகல செலவுகளும், முகாமையாளர் தரகும் கழித்த பின்னரான தேறியலாபத்தில் 5% முகாமையாளர் தரகு ஏற்பாடு செய்தல் வேண்டும்.

வேண்டப்படுவது

1) 2017/3/31ல் முடிவடைந்த ஆண்டுக்கான வியாபார இலப நட்டக் கணக்கு
2) 2017/3/31ல் உள்ளவாறான நிதிநிலமைக் கூற்று

(10 புள்ளி)

ஆ) சுமி, பிரமி, தரணி ஆகியோர் பங்குடமையின் பங்காளர்களாவர். பங்குடமையின் உடன்படிக்கை வருமாறு இலாப நட்டம் 2:2:1 ஆகும். இதில் தரணி 2017/01/01 ஓய்வு பெறுகிறார். முன்னைய ஒப்பந்தப்படி தொடர்ந்து செயற்படுகின்றனர்.
ஓய்வுபெறும் பங்காளரின் உரிமைத் தொகையினைக் கணிப்பிடுவதற்கு இதுவரை கணக்குகளில் காட்டப்படாதிருந்த பங்குடமையின் நன்மதிப்பு பெறுமதியினை ரூ. 200,000 ஆக பங்காளர் ஏற்றுக் கொண்டு நன்மதிப்புக் கணக்கில் காட்டாது பங்காளர் மூலதனக் கணக்கினூடாக சீராக்கிக் கொள்வதற்கு பங்காளர் இணங்கியிருந்தனர்.

வேண்டப்படுவது.

பங்காளர் ஓய்வு பெற்றபின் நன்மதிப்பைக் கணித்து இதற்கான நாட்குறிப்பு பதிவையும் காட்டுக.

(5 புள்ளி)

(15 புள்ளிகள்)

www.ikedu.lk